# அரசு கல்லூரியில் பயிற்சி பட்டறை சி




■ சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் அரசு கலைக் கல்லூரியில், தேசிய அளவில் ஆய்வு திட்டம் என்ற தலைப்பில் நடந்த பயிற்சி பட்டறையை, கல்லூரி முதல்வர் சாந்தி துவக்கி வைத்தார்.

**கிள்ளை, பிப். 10–**

சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் அரசு கலைக் கல்லூரியில், கணிதவியல் துறை சார்பில், தேசிய அளவில் ஆய்வு திட்டம் என்ற தலைப்பில், பயிற்சி பட்டறை நடந்தது.

கல்லூரி முதல்வர் சாந்தி பயிற்சி பட்டறையை, துவக்கி வைத்தார். துறை தலைவர் மீனா வரவேற்றார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியர் சாதிக்பாட்ஷா, பாரதிதாசன் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் சுருளிநிதி பேசினர்.

பயிற்சி பட்டறையில், உதவி பேராசிரியர்கள் விஜயலட்சுமி, புனிதவள்ளி, அனிதா, சிவக்குமார், முத்துராஜ், கந்தன் பல்வேறு மாநிலங்களில் இருந்து பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் பங்கேற்றனர்.

உதவி பேராசிரியர் அர்ச்சுனன் நன்றி கூறினார்.